CASE NO : CP 2/2024

NAME :PW1 – மயில்சாமி

DATE : 02.12.2025

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்துவைக்கப்பட்ட பின்பு குறுக்கு விசாரணை

நான் எதிர்மனுதாரர் சங்கத்தில் செயலாளராக முழு பொறுப்பில் இருந்தேன் என்றால் சரிதான். நான் என் கீழ் பணிப்புரியக் கூடிய தொழிலாளர்கள் தவறு செய்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு தலைவர் இல்லாத சமயத்தில் எனக்கு இருந்தது என்றால் சரிதான். செயலாளர் என்ற முறையில் என் கீழ் உள்ள பணியாளர்களுக்கு பணி நியமனம் செய்வது அவர்கள் தவறு செய்யும் பட்சத்தில அவர்களுக்கு குற்றசாட்டு குறிப்பாணை வழங்கி தனி அலுவலரின் அனுமதி பெற்று நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் பெற்று வந்தேன் என்றால் சரியல்ல. தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டத்தின் படி செயலாளர் என்பவர் தலைமை நிர்வாக அதிகாரி என்று வரையறுக்கப்படுவார் என்றால் நிர்வாகத்தின் கீழ் பணிபுரிந்தேன். நான் என் மனுவில் கோரியுள்ள பணிக்கொடை, சம்பள பாக்கி, வருங்கால வைப்பு நிதி மற்றும் ஈட்டிய

விடுப்பு சம்பளம் ஆகியவற்றின் கீழ் நான் பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். நான் பணிக்கொடைக்கு மட்டும் தனியாக மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வருங்கால வைப்பு நிதிக்கு என்று தனியாக துறை உள்ளது என்றும் அதில் மட்டும் தான் அதை கோர முடியும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் சங்கத்திலே பிடித்தம் செய்து மத்திய கூட்டுறவு வங்கியில் செலுத்தி வருகிறார்கள். இந்த மனுவில் கோரியுள்ள சம்பள பாக்கி கேட்டுள்ள தொகையில் 50%யை பெற்று கொண்டேன் என்றால் சரிதான். சம்பள பாக்கி தொகையில் மட்டும் பல்வேறு தேதிகளில் ரூ. 10,30,000/- பெற்றுள்ளேன் என்றால் சரிதான். இந்த மனு நிலுவையில் உள்ள போது 30.07.2024ம் தேதி நான் ரூ. 1,00,000/- பெற்று கொண்டேன் என்றால் சரிதான். ரூ.18,00,000/- க்கு நகையை அடமானம் வைத்ததை வட்டியுடன் சேர்த்து ரூ. 21,00,000/- செலுத்தி நான் நகையை கடந்த வாரம் தான் திருப்பினேன் என்றால் சரிதான். என் மீது ஏதாவது தண்ட தீர்வை நடவடிக்கை எடுத்து விடுவார்கள் என்று பயந்து தான் அவசர அவசரமாக நகையை மீட்டினேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் சங்கத்தில் தொடர்ச்சியாக 20 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்து வந்தால்

அவர்களக்கு 30 நாட்கள் கருணை தொகை இழப்பீடாக வழங்க வேண்டும் என்று மனுவில் குறிப்பிட்டுள்ளது நடைமுறையிலும் இல்லை, சங்க விதிகளிலும் இல்லை மட்டும் சட்ட விதிகளிலும் இல்லை என்றால் சரியல்ல. நான் தொழிற்தகராறு சட்ட 2S ன்படி நான் தொழிலாளி அல்ல என்றும் நான் தொழிலாளர் நீதிமன்றத்தில் எந்த பரிகாரமும் கோர முடியாது என்றால் சரியல்ல. நான் 1992 முதல் 12(3) settlement படி சம்பளம் பெற்று வருகிறேன்.

மறுவிசாரணை இல்லை.

Sd/-xxx

தலைமை தாங்கும் அதிகாரி,

முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,

கோயமுத்தூர்.